**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 98/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 7 |
| Name | : | காளிதாசன் முருகவேல், வயது 64 |
| Father Name/Husband Name | : | குழந்தைவேலு |
| Village | : | சாப்டுர் |
| Taluk | : | பேரையூர் |
| Calling | : | முதல்வர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of July 2026.

**(Accused absent. 317 CrPC petition filed and allowe).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது சாப்டுரில் வசித்து NEC தனியார் கல்லூரியல் முதல்வராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 யை எனக்கு தெரியும். கடந்த 04.03.2024 ஆம் தேதி மதியம் 02.30 மணியளவில் நான் பணிபுரிந்த கல்லூரியில் முதல்வரின் அறையில் நான் இருக்கும் போது மெக்கானிக்கல் துறையின் துறை தலைவர் அய்யாராஜா என்பவர் என்னிடம் மெக்கானிக்கல் இணை பேராசிரியராக பணிபுரிந்து வந்த ரமணன் என்பவரை அதே கல்லூரியில் படிக்கும் இரண்டாம் ஆண்டு படிக்கும் M.E மாணவர் பாலாஜி என்பவர் ரமணனின் ஆசிரியரின் அறையில் வைத்து மற்ற இரண்டு மாணவர்கள் சேர்த்து Project presentation சம்பந்தமாக discuss செய்து கொண்டிருந்தார்கள்.

2 அப்போது பாலாஜி ஆராய்ச்சி கட்டுரையில் உள்ள குறைகளை சுட்டி காட்டி அந்த discussion ல் ஆசிரியர் ரமணன் பேசி கொண்டிருந்தார். அந்த குறையை ஆசிரியர் ரமணன் சுட்டி காட்டியதால் ஆத்திரம் அடைந்த மாணவர் பாலாஜி கையால் தலையிலும், முகத்திலும் மாறி மாறி அடித்ததாக என்னிடம் கூறினார். அப்போது சத்தம் கேட்டு இரண்டு ஆசிரியர்களான சுடலையாண்டி, ஜெயவெங்கடேஷ் ஆகியோர்கள் சண்டையை தடுத்து சமாதானப்படுத்தி அந்த பாலாஜி

என்ற மாணவனை வெளியே கூப்பிட்டு வந்தார்கள். அப்போது ரமணன் அய்யாராஜாவிடம் மேற்படி சம்பவத்தை சொன்னதன் பேரில் என்னிடம் அய்யாராஜா சம்பவத்தை குறித்து விளக்கினார். பின்னர் இது சம்பந்தமாக நான் மாணவனை பெற்றோரை அழைத்து நடந்த சம்பவத்தை அவர்களிடம் கூறி கல்லூரி ரீதியாகவும், சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும் தெரிவித்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

3 நான் மேற்படி கல்லூரியில் 1986 லிருந்து பணிபுரிந்து வந்து 2019 லிருந்து முதல்வராக அந்த கல்லூரியில் பொறுப்பு வகித்து வருகிறேன். நான் மேற்படி கல்லூரியில் பணிபுரிந்த காலத்தில் இதுவரை இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நடைபெற வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல. மொத்தம் எங்களது கல்லூரியில் 7 துறைகள் உள்ளது.

4 மெக்கானிக்கல் துறையில் மொத்தம் 29 ஆசிரியர்கள் மற்றும் சில non teaching staffs ம் வேலை பார்க்கிறார்கள். ஆசிரியர்களுக்கென்று தனி அறைகளும், non teaching staffs க்கு தனி அறைகளும் உள்ளது என்றால் ஆசிரியர்களுக்கு மட்டும் அறைகள் உண்டு, non teaching staffs க்கு அறைகள் கிடையாது, அவர்கள் லேப்பிலும், லேப் store room லும் இருப்பார்கள், மூத்த பேராசிரியர்களுக்கு மட்டும் தனி அறைகள் உண்டு. அ.சா.1 ன் அறை மெக்கானிக்கல் துறையில் முதல் மாடியில் 2 வது படிக்கட்டுக்கு அருகில் உள்ளது. வழக்கு சம்பவம் நடைபெற்ற போது அ.சா.1 அவரது மேற்படி அறையில்தான் இருந்தார்.

5 கல்லூரியில் எனக்கு மேல் Correspondent உயர் பொறுப்பில் இருக்கிறார். இந்த சம்பவம் குறித்து Correspondent க்கு நான் வாய்மொழியாக தகவல் சொன்னேன். இந்த வழக்கு சம்பந்தமாக புகார் கொடுப்பதற்கு Correspondent னிடம் முன் அனுமதி பெறவில்லை, அவர் சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யுங்கள் என்று சொன்னார். நான் அவ்வாறு Correspondent சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் புகார்மனு கல்லூரியின் letter pad பயன்படுத்தி கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் கல்லூரி letter pad மூலம் புகார் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

6 05.03.2024 அ.சா.1 கல்லூரிக்கு பணிக்கு வந்திருந்ததாரா என்றால் அவர் வந்திருக்க வாய்ப்புண்டு, அது சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 04.03.2024 ஆம் தேதியிட்ட அ.சா.1 மற்றும் எதிரியின் வருகை பதிவேடுகளை போலீசாரிடம் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். எங்களது கல்லூரியில் சுமார் 70 – 80 சிசிடிவி கேமராக்கள் உள்ளது. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகே சிசிடிவி கேமராக்கள் இருந்ததா என்றால் மெக்கானிக்கல் பிரிவினுள் கண்காணிப்பு கேமராக்கள் கிடையாது, மெக்கானிக்கல் பிரிவிற்கு வெளியே கேமராக்கள் உண்டு. மேற்படி கண்காணிப்பு கேமராக்கள் பதிவுகளை பார்த்தால் யார் எத்தனை மணிக்கு வந்து சென்றார் என்று தெரிய வரும் என்றால் சரிதான். அந்த சிசிடிவி பதிவுகளை போலீசார் விசாரணையில் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் வழக்கு சம்பவத்தை அ.சா.1, 2, 3 மூலம் கேள்விப்படவில்லை என்றாலும், எதிரியின் பெற்றோர்களுக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றாலும், அ.சா.1 கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.